**OS.No.44/2023, Dated 14.10.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 14th day of October 2025.

**பி.வா.சா.1 – பலராமன் த/ப. பொன்னுசாமி வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நானும் வாதிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் ஓய்வு பெற்ற அரசு ஊழியராவேன். எனது தகப்பனார் பெயர் பொன்னுசாமி ஆகும். நான் V.P.பலராமன் என்று தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். தாவா சொத்து வட வணக்கம்பாடி கிராமத்தில் நஞ்சை சர்வே எண்.34/2 ல் 11 செண்டு என்றால் சரிதான். இந்த சொத்தும் சர்வே எண்.34/1, 34/6 ல் உள்ள சொத்துக்களும் ஆதியில் முருகேச கவுண்டர் என்பவர் கிரையம் வாங்கிய சொத்தாகும். அவருடைய வாரிசுகள் தான் நடேசகவுண்டர் மற்றும் ஏழுமலை கவுண்டர் ஆவார்கள். ஏழுமலை கவுண்டரிடமிருந்து தான் தாவா சொத்து மற்றும் சர்வே எண். 34/1, 34/6 ஆகிய சொத்துக்களை கிரையம் வாங்கினேன் என்பது தான் என் வழக்காகும். ஏழுமலைக்கும், நடேசகவுண்டருக்குமிடையே 1982ல் பாகப்பிரிவினை ஏற்பட்டு அந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில் ஏழுமலையிடம் கிரையம் வாங்கினேன் என்று பதிலுரையில் குறிப்பிட்டுள்ளேன். நான் கிரையம் வாங்கிய ஆவணத்தை பி.வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எனக்கும் நடேசகவுண்டருக்குமிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையின் படி வந்த சொத்து என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துடன் கிரையம் வாங்கிய சர்வே எண்34/1, 34/6 ஆகியவை குறித்து நடேச கவுண்டர் மகன் ஜானகிராமன் பெயரில் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.82/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1990ல் ஏழுமலையிடம் கிரையம் வாங்கிய சொத்துக்கள் அனைத்து குறித்தும் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். நான்

1990ல் கிரையம் வாங்கும்போது வில்லங்கம் எதுவும் போட்டு பார்க்கவில்லை. நான் வில்லங்கம் போட்டு பார்த்திருந்தால் 1983 ல் கண்ணன் மகன் முனுசாமி கிரையம் வாங்கிய விபரம் தெரிந்திருக்கும் என்றால் சரிதான். அவர் ஏற்கனவே கிரையம் வாங்கியிருக்கும்போது 1990ல் நான் கிரையம் வாங்கியிருக்க மாட்டேன் என்றால் சரிதான். கண்ணன் குமாரர் முனுசாமி என்பவரும்ட பரசுராமன் மகன் முனுசாமி என்பவரும் வேறு வேறு நபர்கள் என்றால் சரிதான். பரசுராமன் மகன் முனுசாமி என்பவர் தேவராஜீலு என்பவருக்கு 1981ல் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். பரசுராமன் குமாரர் முனுசாமிக்கு ஏழுமலை கவுண்டர் 1972 ல் கிரையம் செய்தார் என்றால் சரிதான். தேவராஜீலு தான் கண்ணன் மகன் முனுசாமிக்கு 1983 ல் கிரையம் செய்தார் என்றால் சரிதான். கிரையம் வாங்கியதிலிருந்து தாவா சொத்திற்கு கண்ணன் மகன் முனுசாமி பெயரில் பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் 2016 ல் தாவா சொத்து மற்றும் சர்வே எண்.34/1 மற்றும் 34/6 ல் உள்ள சொத்துக்களுக்கு எனது பெயரில் பட்டா மாற்றி கொடுக்க வேண்டுமென்று மனு கொடுத்தேன் என்றால் சரிதான். 1990 லிருந்து 2016 வரை எனது பெயரில் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை. 2016 வரை பட்டா மாற்றம் செய்வதற்கு நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நான் அரசு பணியில் இருந்ததால் என்னால் நடவடிக்கை எடுக்க இயலவில்லை. நான் கொடுத்த மனுவின் பேரில் வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். அந்த உத்தரவு வாதி தரப்பில் வா.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவில் சர்வே எண்.34/1 மற்றும் 34/6 ஜானகிராமன் பெயரிலும், சர்வே எண்.34/2 கண்ணன் மகன் முனுசாமி பெயரிலும் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 34/1 மற்றும் 34/6 சம்பந்தமாக வந்தவாசி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.176/2003 என்ற வழக்கு நடைபெற்று வருவதாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கண்ணன் மகன் முனுசாமி என்பவர் ஆஜராகி சர்வே எண்.34/2 ல் தனக்கு சொந்தமாக உள்ள 52 செண்டு போக மீதம் இருப்பின் அதனை மனுதாரருக்கு அளிக்க எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று தெரிவித்ததாக அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.34/2ல் மொத்த விஸ்தீரனம் 11 செண்டு தான் என்றால் சரிதான். அந்த உத்தரவில் சர்வே எண்.34/2 ல் 52 செண்டு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது தவறுதான் என்றால் எனக்கு அது தெரியாது. அந்த உத்தரவில் சர்வே எண்.34/2 ல் 52 செண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்பதால் முழு உத்தரவுமே தவறானது என்றால் சரியல்ல. நான் பல ஆண்டுகாலமாக செய்யாறில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை முனுசாமியின் வாரிசுகளான வாதிகள் தான் இன்று வரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. வாதிகள் முனுசாமி பெயரில் உள்ள பட்டா வரி இரசீதுகள் ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. ஏழுமலை கவுண்டர் 1972 ல் பரசுராமன் மகன் முனுசாமிக்கு தாவா சொத்தினை கிரையம் செய்த பிறகு 1982ல் பாகப்பிரிவினையில் சொத்தினை சேர்த்து எனக்கு 1990 ல் கிரையம் செய்தது சட்டப்படி செல்லதக்கதல்ல என்றாலும், அந்த கிரைய பத்திரம் வாதிகளை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக முனுசாமி பெயரிலோ வாதிகள் பெயரிலோ நான் எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கிலும் எனது உரிமையை விளம்புகை செய்ய கோரி எதிர்கோருரிமை கோரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லாத காரணத்தினாலும், எனக்கு அதில் எவ்வித உரிமையும் இல்லாத காரணத்தினால்தான் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்ட

சொத்து என்பதால் அதில் நான் உரிமை கோர இயலாது என்றாலும், எனவே தாவா படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2025.10.14 18:09:14 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்